புதுச்சேரி அரசு
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்,**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.**

## செய்தி

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, முதல் பருவ மரவள்ளி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.5000/-வழங்க திட்டமிடப்பட்டு, விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இவ்விண்ணப்பங்கள் வயல் ஆய்வு செய்த பின் மரவள்ளி சாகுபடி செய்த விவசாயிகளின் பெயர் பட்டியல், சமுதாய தணிக்கை செய்வதற்காக புதுவையில் உள்ள சம்பந்தப்பட்ட உழவர் உதவியகங்களின் "அறிவிப்பு பலகையில்" **18/10/2022** முதல் **27/10/2022** வரை விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையதளத்திலும் (https://agri.py.gov.in) வெளியிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பட்டியலில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வரும் **27/10/2022** தேதிக்குள் புதுச்சேரி தாவரவியல் பூங்காவில் உள்ள வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை), தாவரவியல் பூங்கா, அலுவலகத்தில் எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி. சிவராமன்)
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை)**
**தாவரவியல் பூங்கா**
**புதுச்சேரி**